03-03-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 21.11.1998

சேவையுடன் கூடவே தேகத்தில் இருந்தாலும் விதேகி அவஸ்தாவின் அனுபவத்தை அதிகப் படுத்துங்கள்

இன்று பாப்தாதா தம்முடைய நாலாபுறமும் உள்ள குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். ஏனென்றால் பாபாவுக்குத் தெரியும் - என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் - கடைசி புருஷார்த்தி குழந்தையாக இருந்தாலும் பிறகும் கூட உலகத்தில் பெரியதிலும் பெரிய பாக்கியவான். ஏனென்றால் பாக்கிய விதாதா பாபாவைத் தெரிந்து, அறிந்து கொண்டு பாக்கிய விதாதாவின் நேரடிக் குழந்தைகளாக ஆகி விட்டனர். அத்தகைய பாக்கியம் முழுக் கல்பத்திலும் எந்த ஓர் ஆத்மாவுக்கும் இருந்ததில்லை, இனியும் இருக்க முடியாது. அதோடு முழு உலகத்திலும் அனைவரை விடவும் பெரிய செல்வந்தராக யாரும் இருக்க முடியாது. எவ்வளவு தான் கோடீஸ்வரராக இருந்தாலும் குழந்தைகளாகிய உங்கள் கஜானாக்களோடு யாருடைய தையும் ஒப்பிட முடியாது. ஏனென்றால் குழந்தைகளின் ஒவ்வோரடியிலும் பல கோடி மடங்கு வருமானம். நாள் முழுவதிலும் ஒவ்வொரு நாளும் ஓரிரு அடிகள் பாபா நினைவில் இருந்தாலும் அடி எடுத்து வைத்தாலும் ஒவ்வோரடியிலும் பல கோடி மடங்கு வருமானம் ஆக, நாள் முழுவதிலும் எவ்வளவு கோடி சேமிப்பாயின? அது போல் ஒரே நாளில் பல கோடி மடங்கு வருமானம் சம்பாதிப் பவர் யாராவது இருப்பார்களா? எனவே பாப்தாதா சொல்கிறார் - பாக்கியவானைப் பார்க்க வேண்டும் அல்லது உலகிலேயே அனைவரை விடவும் பணக்கார ஆத்மாவைப் பார்க்க வேண்டு மானால் பாபாவின் குழந்தைகளைப் பாருங்கள்.

குழந்தைகள் உங்களிடம் ஒரு ஸ்தூல செல்வத்தின் கஜானா மட்டுமில்லை, அவர்களோ வெறும் பணத்தின் செல்வந்தர்கள். குழந்தைகள் நீங்களோ எவ்வளவு கஜானாக்களால் நிரம்பியவர்கள்! கஜானாக்களின் பட்டியல் தெரியும் இல்லையா? இந்த ஸ்தூல செல்வம் ஒன்றும் பெரிய விஷயம் கிடையாது. ஆனால் உங்களிடம் உள்ள ஞான கஜானா, சக்திகளின் கஜானா, சர்வ குணங்களின் கஜானா, குஷியின் கஜானா மற்றும் அனைவர்க்கும் சுகம்-சாந்திக்கான வழி சொல்வதன் மூலம் கிடைக்கும் ஆசிர்வாதங்களின் கஜானா, இந்த அவிநாசி கஜானாக்கள் பரமாத்ம குழந்தைகள் தவிர வேறு யாரிடமும் அவிநாசியாக இருப்பதில்லை. எனவே பாப்தாதாவுக்கு அப்படிப்பட்ட கஜானாக் களின் மாலிக் குழந்தைகள் மீது எவ்வளவு ஆன்மிகப் பெருமிதம் உள்ளது! பாப்தாதா சதா குழந்தை களை அந்த மாதிரி அனைத்தும் நிறைந்தவர்களாகப் பார்த்து இந்தப் பாடலைத் தான் பாடுகிறார் - ஆஹா குழந்தைகளே, ஆஹா! உங்களுக்கும் கூட உங்கள் மீது அவ்வளவு ஆன்மிகப் பெருமிதம், அதாவது நஷா உள்ளது இல்லையா? இதற்காகக் கை தட்டலாம். (அனைவரும் கை தட்டினார்கள்) இரண்டு கைகளுக்கும் ஏன் கஷ்டம் கொடுக்கிறீர்கள்? ஒரு கையால் தட்டுங்கள். ஒரு கையால் தட்டுவதற்கு வருகிறது இல்லையா? பிராமணர்களுடையவை அனைத்தும் தனிப்பட்டவை. பிராமணர்கள் அமைதியை விரும்புகிறவர்கள். அதனால் கை தட்டுவதும்

அமைதியாகத் தட்டியது சரி தான். ஆக, நஷாவோ அனைவர்க்கும் சதா இருக்கவே செய்கிறது மற்றும் இனிமேலும் இருக்கும். இது நிச்சயிக்கப் பட்டது.

பாப்தாதா சமயத்தின் மாற்றத்தில் உள்ள தீவிர வேகத்தைப் பார்த்து, குழந்தைகளின் புருஷார்த்தத்தின் வேகத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையை யும் ஜீவன்முக்த் ஸ்திதியில் சதா பார்க்க விரும்புகிறார். இது உங்கள் அனைவரின் சவாலாக உள்ளது - தந்தையிடமிருந்து முக்தி ஜீவன் முக்திக்கான ஆஸ்தியை வந்து பெற்றுக் கொள்ளுங் கள். ஆனால் உங்களுக்கோ முக்திக்கான ஆஸ்தி கிடைத்து விட்டது இல்லையா? அல்லது கிடைக்கவில்லையா? (கிடைத்து விட்டது) சத்யுகத்தில் அல்லது முக்தி தாமத்தில் முக்தி அல்லது ஜீவன்முக்தியின் அனுபவம் செய்ய முடியாது. முக்தி ஜீவன்முக்திக்கான ஆஸ்தியின் அனுபவம் இப்போது சங்கமயுகத்தில் தான் செய்ய வேண்டும். உயிர் வாழ்ந்து கொண்டே, சமயம் (சிறு துன்பத்தைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியாத அளவு) மென்மையானதாக ஆகும் போதும், பரிஸ்திதிகள், பிரச்சினைகள், வாயு மண்டலம் இரட்டைக் குற்றமுள்ளதாக ஆகும் போதும் கூட, இந்த அனைத்துப் பிரபாவங்களில் இருந்தும் விடுபட்டு, உயிர்வாழ்ந்து கொண்டிருந்தாலும் இந்தப் பலவிதமான அனைத்து பந்தனங்களில் இருந்தும் விடுபட்ட வராக, ஒரு சூட்சும பந்தனம் கூட இல்லாதவராக ஆக வேண்டும். அந்த மாதிரி ஜீவன்முக்த் ஆகியிருக்கிறீர்களா? அல்லது கடைசி யில் ஆவீர்களா? இப்போது ஆவீர்களா, கடைசியில் ஆவீர்களா? கடைசியில் ஆவதற்கு பதில் இப்போதே ஆக வேண்டும் அல்லது ஆகியிருக்கிறீர்களா அல்லது ஆகத் தான் வேண்டும் என்று யார் புரிந்து கொண்டிருக்கிறீர்களோ, கை உயர்த்துங்கள். (அனைவரும் கை உயர்த்தினார்கள்) இரண்டுக்குமே கை உயர்த்து கிறீர்கள். சாமர்த்தியசாலிகள் நீங்கள். சாமர்த்தியம் செய்யுங்கள். ஆனால் பாப்தாதா இப்போதிருந்தே தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார் - தயவுசெய்து கவனம் வையுங்கள். பாபா, ஒவ்வொரு பிராமணக் குழந்தையையும் பந்தன் முக்த், ஜீவன் முக்த்தாக ஆக்கத் தான் வேண்டும். எந்த விதி மூலமாகவும் ஆக்க வேண்டியது அவசியம். விதிகள் என்ன என்பது பற்றி அறிவீர்கள் இல்லையா? ஆக, அது போல் ஆக வேண்டியவர் நீங்கள் தாம் இல்லையா? விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, ஆகவோ வேண்டும் தான். பிறகு என்ன செய்வீர்கள்? (இப்போதிருந்தே ஆவோம்) உங்கள் வாயில் குலாப்ஜாமுன். அனைவரின் வாயிலும் குலோப்ஜாமுன் வந்து விட்டது இல்லையா? ஆனால் இந்த குலோப்ஜாமுன் இப்போது பந்தன்முக்த் ஆவதற்கானது. குலோப்ஜாமுன் சாப்பிட்டு விடுகிறீர்கள் என்று அந்த மாதிரி இல்லை.

ஹாலின் அழகு நன்றாக உள்ளது. முற்றிலும் மாலையாகவே தோன்றுகிறது. இங்கிருந்து வந்து பார்த்தால் அந்த மாதிரி மாலை தோன்றுகிறது. நாற்காலிகளில் அமர்பவர்களின் மாலை தயாராகிக் கொண்டிருக்கிறது. நன்று. காரணத்துடனோ காரணம் இல்லாமலோ இப்போது எப்படி நாற்காலி பெற்றிருக்கிறீர்களோ, அது போலவே எப்போது பாப்தாதா இறுதி சமயத்தின் பிரமாணம் ஜீவன்முக்தியின் நாற்காலியில் அமர்வதற்கான விசில் அடிக்கிறாரோ, அப்போதும் கூட அமர்வீர் களா அல்லது இப்போதே நாற்காலியில் அமர்ந்திருக்கிறீர்களா? தரையில் அமர்ந்து கொண்டே நாற்காலி பெற்றுக் கொள்ள மாட்டோம், முதலில் தாங்கள் என்று அப்படி இல்லை.

தரையில் அமர்வது என்பது தபஸ்யாவின் அடையாளம். ஆரோக்கியத்தின் அடையாளம். ஆரோக்கியமும் உள்ளது, தபஸ்யா மூலம் கஜானாக்களின் செல்வமும் உள்ளது என்றால், எங்கே ஆரோக்கியம், செல்வம் உள்ளதோ, அங்கே மகிழ்ச்சியும் இருக்கவே செய்யும் -- ஆரோக்கியமாக இருக்கிறீர்கள், செல்வம் நிறைந்தவர் களாகவும் இருக்கிறீர்கள்.

ஆக, இன்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் - குழந்தைகளுக்கு மூன்று விதமான ஸ்டேஜ்கள் உள்ளன. ஒன்று - புருஷார்த்தி, அதில் புருஷார்த்திகளும் இருக்கிறார்கள் மற்றும் தீவிர புருஷார்த் திகளும் இருக்கிறார்கள். இரண்டாவது - புருஷார்த்தத்தின் பிராலப்தமாக ஜீவன்முக்த் ஸ்டேஜில் அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கடைசி சம்பூர்ண ஸ்டேஜ் என்பது - தேகத்தில் இருந்தாலும் விதேகி அவஸ்தாவின் அனுபவம். ஆக, மூன்று ஸ்டேஜ்களைப் பார்த்தோம். புருஷார்த்தத்தின் ஸ்டேஜில் அதிகம் பார்த்தோம். பிராலப்தம் ஜீவன்முக்த் நிலையினுடையது. பிராலப்தம் என்பது சென்டரின் நிமித்தமாவது அல்லது நல்ல சொற்பொழிவாளர் ஆவது அல்லது டிராமாவின் அனுசாரம் தனித்தனியாக விசேஷ சேவைக்கு நிமித்தமாவது இது பிராலப்தம் கிடையாது. இதுவோ லிஃப்ட் மற்றும் முன்னேறிச் செல்வது மற்றும் அனைவரின் ஆசிர்வாதங் களைப் பெறுவது. ஆனால் பிராலப்தம் என்பது ஜீவன்முக்த் நிலையினுடையது. எந்த ஒரு பந்தனமும் இருக்கக் கூடாது. நீங்கள் ஒரு சித்திரத்தைக் காண்பிக்கிறீர்கள் இல்லையா? சாதாரண அஞ்ஞானி ஆத்மாவை எவ்வளவு கயிறுகளால் கட்டப் பட்டிருப்பதாகக் காண்பிக்கிறீர்கள்! அது அஞ்ஞானி ஆத்மாவுக்கு இரும்பாலான சங்கிலி. பெரிய-பெரிய பந்தனங்கள். ஆனால் ஞானம் நிறைந்த ஆத்மாக்களாகிய குழந்தைகளுக்கு மிக நுட்பமான, கவரக்கூடிய கயிறுகள். இரும்பாலான சங்கிலி இப்போது இல்லை - காண்பிப்பதற்கு. மிக நுட்பமாகவும் உள்ளது, ராயலாகவும் உள்ளது. ஆளுமையை உணரக்கூடியவர்களாகவும் உள்ளனர். ஆனால் அந்தக் கயிற்றைப் பார்க்க முடியாது. தனது நல்ல தன்மை உணரப்படுகிறது. நல்லது இல்லை, ஆனால் நாம் மிக நல்லவர் என உணர்கிறார்கள். நாம் மிகவும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று நினைத்துக் கொள்கிறார்கள். ஆக, பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் - இந்த ஜீவன்பந்தனத்தின் கயிறுகள் பெரும்பான்மையோரிடம் உள்ளன. ஒன்று அல்லது பாதியாக இருக்கலாம். ஆனால் ஜீவன்முக்த் நிலையில் உள்ளவர்களாக மிகக் கொஞ்சம் பேரையே பார்த்தார். ஆக, பாப்தாதா பார்த்துக் கொண்டி ருந்தார் - கணக்கின் அனுசாரம் இது இரண்டாவது ஸ்டேஜ் ஜீவன்முக்த் ஸ்டேஜ். கடைசி ஸ்டேஜ் - தேகத்திலிருந்து விடுபட்ட விதேகி நிலையின் ஸ்டேஜ். அந்த ஸ்டேஜ் மற்றும் சொல்லப் பட்ட ஸ்டேஜ் இவற்றுக்காக மிக-மிக-மிக கவனம் தேவை. குழந்தைகள் அநேகர் கேட்கிறார்கள் - 99 வந்தால் என்னவாகும்? என்ன செய்வது? என்ன செய்வது? என்ன செய்யக் கூடாது?

பாப்தாதா சொல்கிறார் - 99- இன் சக்கரத்தை விடுங்கள். இப்போதிருந்தே விதேகி ஸ்திதியின் மிகுந்த அனுபவம் தேவை. பரிஸ்திதிகள் (குழப்பங்கள்) என்னென்ன வருகின்றனவோ, வரப் போகின்றனவோ, அதில் விதேகி ஸ்திதியின் அப்பியாசம் மிகவும் தேவை. எனவே மற்ற அனைத்து விஷயங்களை விட்டு, இதுவோ நடக்காது, இதுவோ நடக்காது. என்னவாகும் என்ற கேள்வியை விட்டு விடுங்கள். விதேகி அப்பியாசம் செய்யும் குழந்தைகள் மீது எந்த ஒரு பரிஸ்திதி

அல்லது குழப்பமும் பிரபாவத்தை ஏற்படுத்த முடியாது. இயற்கையின் ஐந்து தத்துவங் களும் நன்றாக அசைப்பதற்கான முயற்சி செய்யலாம். ஆனால் விதேகி அவஸ்தாவின் அப்பியாசி ஆத்மாக்கள் முற்றிலும் அந்த மாதிரி ஆடாத அசையாத நிலையில் இருந்து அனைத்து விஷயங்களையும் கடந்து பாஸ் வித் ஆனர் ஆவார்கள். அப்போது அனைத்து விஷயங்களும் கடந்து சென்று விடும். ஆனால் அது பிரம்மா பாபாவுக்கு சமமாக பாஸ் வித் ஆனர் என்பதன் நிரூபணமாக இருக்கும். பாப்தாதா ஒவ்வொரு சமயமும் சமிக்ஞை கொடுக்கவும் செய்கிறார், மேலும் கொடுத்துக் கொண்டே இருப்பார். நீங்கள் யோசிக்கவும் செய்கிறீர்கள், பிளான் உருவாக்க வும் செய்கிறீர்கள். உருவாக்குங்கள். யோசியுங்கள், ஆனால் என்னவாகும் அந்த ஆச்சரியத்துடன் இல்லை. விதேகி, சாட்சி ஆகி, யோசியுங்கள், ஆனால் யோசித்தீர்கள், பிளான் உருவாக்கினீர்கள் மற்றும் ஒரு விநாடியில் தெளிவான (ப்ளெயின்) ஸ்திதியை உருவாக்கிக் கொண்டே செல்லுங்கள். இப்போது ஸ்திதி தான் அவசியமாக உள்ளது. இந்த விதேகி ஸ்திதி பரிஸ்திதிகளை மிக சுலபமாகக் கடந்து செல்ல வைக்கும். எப்படி மேகம் வருகிறது, சென்று விடுகிறது, அது போல. மற்றும் விதேகி ஆகி, ஆடாத, அசையாத நிலையில் இருந்து விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போது கடைசி நேரத்தை யோசிக்கிறீர்கள். ஆனால் கடைசி ஸ்திதியை யோசியுங்கள்.

நாலாபுறத்திலும் இருந்து வரும் சேவை பற்றிய செய்திகளை பாப்தாதா கேட்டுக் கொண்டே இருக்கிறார். மேலும் களைப்பற்ற சேவாதாரிகள் அனைவருக்கும் மனதார வாழ்த்தும் சொல்கிறார். சேவையை மிக நல்ல ஊக்கம்-உற்சாகத்துடன் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால் சேவை மற்றும் ஸ்திதியின் சமநிலை சில நேரம் கொஞ்சம் இந்தப் பக்கம் சாய்ந்து விடுகிறது, சில நேரம் அந்தப் பக்கம். அதனால் சேவையை நன்றாகச் செய்யுங்கள். பாப்தாதா சேவைக்குத் தடை ஏதும் சொல்வதில்லை. இன்னும் நன்றாக சேவை செய்யுங்கள். ஆனால் சேவை மற்றும் ஸ்திதியின் சமநிலை சதா வைத்துக் கொண்டே செல்லுங்கள். ஸ்திதியை உருவாக்குவதில் கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டி உள்ளது. மற்றும் சேவையிலோ சகஜமாக ஆகி விடுகிறது. எனவே சேவை யின் பலம் ஸ்திதியை விட கொஞ்சம் உயர்ந்ததாக ஆகி விடுகிறது. சமநிலை வையுங்கள் மற்றும் பாப்தாதாவின், சேவை செய்யும் அனைத்து ஆத்மாக்களின், சம்பந்தம்-தொடர்பில் வரக்கூடிய பிராமண பரிவாரத்தின் ஆசிர்வாதங் களைப் பெற்றுக் கொண்டே செல்லுங்கள். இந்த ஆசிர்வாதங் களின் கணக்கை அதிகமாக சேமியுங்கள். இப்போதைய ஆசிர்வாதங்களின் கணக்கு ஆத்மாக் களாகிய உங்களுக்குள் அவ்வளவு சம்பன்னமாகி விட வேண்டும் - அது துவாபர யுகத்திலிருந்து உங்கள் சித்திரங்கள் மூலமாக அனைவர்க்கும் ஆசிர்வாதங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும். அநேக ஜென்மங்களாக ஆசிர்வாதங்கள் கொடுக்க வேண்டும். ஆனால் ஒரு ஜென்மத்தில் சேமிப்பு செய்ய வேண்டும். அதனால் என்ன செய்வீர்கள்? ஸ்திதியை சதா முன்னால் வைத்து சேவையில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். என்னவாகும் என்று யோசிக்காதீர்கள். பிராமண ஆத்மாக்களுக்கு எல்லாம் நல்லதாகவே உள்ளது, நல்லதே நடக்கும். ஆனால் சமநிலை வைப்பவர் களுக்கு எப்போதுமே நல்லதே நடக்கும். சமநிலை குறைவாக இருந்தால், சில நேரம் நன்றாகவும், சில நேரம் கொஞ்சம் நன்றாகவும் இருக்கும். என்ன செய்ய வேண்டும் என்று கேட்டீர்களா? கேள்விக்குறியை யோசிப்பதன் கணக்கின் படி ஆச்சரியத்துடன் யோசிப்பதை

முடித்து விடுங்கள். இதுவோ நடக்காது, இதுவோ நடக்காது இது ஸ்திதியை மேலே-கீழே ஆக்கி விடும். புரிந்ததா? நல்லது.

வெளிநாட்டு குரூப் எழுந்திருங்கள். நிமித்தமாக்குவதற்கான சேவையின் லட்சியம் நன்றாக வைக்கிறீர்கள். இது விசேஷ குணமாகும். ஒவ்வொருவரும் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தன்னைத் தான் சேவைக்கு நிமித்தமாக்குவதற்கு முன்வரவும் செய்கின்றனர். மேலும் நடைமுறை யிலும் செய்கின்றனர். இதைத் தான் யோசிக்கிறார்கள் - ஒவ்வொரு வீட்டிலும் பாபா-வீடு இருக்க வேண்டும். இந்த ஊக்கம்-உற்சாகம் மிக நல்லது. இந்த ஊக்கம்-உற்சாகத்திற்காக பாப்தாதா இன்னும் முன்கூட்டியே முன்னேறிச் செல்வதற்கான வாழ்த்துகளைத் தந்து கொண்டிருக்கிறார். பாப்தாதா உலக நன்மை செய்வதற்கு நிமித்தமாகக் கூடிய குழந்தை களுக்கு இதைத் தான் சொல்கிறார் - இப்போது சேவை மற்றும் விதேகி அவஸ்தாவில் நம்பர் ஒன் ஆக வெளிநாட்டுக் குழந்தைகள் ஆகியே தீர வேண்டும். ஆவீர்களா? எப்போது? 99-இலா அல்லது 2000-இல் ஆக வேண்டுமா? எப்போதாவது இல்லை, இப்போதே ஆக வேண்டும். அவ்யக்த பாபாவின் பாலனைக்குப் பிரத்தியட்ச நிரூபணம் கொடுக்க வேண்டும். எப்படி பிரம்மா பாபா அவ்யக்தமாகி விதேகி ஸ்திதி மூலம் கர்மாதீத் ஆனார், அப்போது அவ்யக்த பிரம்மாவின் விசேஷ பாலனைக்குப் பாத்திரமாக இருக்கிறீர்கள். எனவே அவ்யக்த பாலனைக்கு, விதேகி ஆவதற்கான மற்றும் சேவை மற்றும் ஸ்திதியின் சமநிலை மூலமாக பதிலைக் கொடுக்க வேண்டும். சரி தானே? ஏற்றுக் கொள்கிறீர்களா? செய்தே ஆக வேண்டும். பாப்தாதா இதை யோசிப்பதில்லை - பார்க்கலாம், யோசிக்கிறோம் அப்படி இல்லை. செய்தே ஆக வேண்டும். உங்களுடைய பாஷையில் சொல்லுங்கள் - செய்தே ஆக வேண்டும். எதையெல்லாம் அனைவரும் டி.வி.யில் பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் அனைவரும் இது போல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் இல்லையா? பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். பாரதத்தில் பார்த்துக் கொண்டிருக்கலாம். அல்லது வெளிநாட்டில் பார்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அனைவருக்கும் ஊக்கம் வந்து கொண்டிருக்கிறது - நாங்கள் செய்வோம், நாங்கள் செய்வோம் நாம் செய்தே ஆக வேண்டும். முன்கூட்டியே வாழ்த்துகள். நல்லது.

(வெளிநாடுகளின் அநேக சகோதர-சகோதரிகள் முதல் தடவையாக வந்துள்ளனர். ரிட்ரீட்டில் வந்துள்ள விருந்தாளிகளும் அமர்ந்துள்ளனர்)

மிக நன்று. அனைவரும் நம்பர் ஒன் பெறக்கூடியவர்கள். மிக நன்று. விருந்தாளி ஆகி வந்து, பாபாவின் குழந்தைகளாக, அதிகாரிகளாக ஆகி விட்டீர்கள். அதிகாரி ஆகி விட்டீர்கள் இல்லையா? அதிகாரிகளா நீங்கள்? மிக நன்று. இப்போது முன்னேறிச் சென்று கொண்டே இருக்க வேண்டும்.

மருத்துவமனையின் டிரஸ்டிகளோடு : அனவரும் டபுள் டிரஸ்டிகளாக இருக்கிறீர்கள். ஒன்று இல்லறத்தில் இருந்து கொண்டே டிரஸ்டி. இன்னொன்று ஆஸ்பத்திரியில் இருந்தாலும் டிரஸ்டி. ஆஸ்பத்திரிக்கும் டிரஸ்டி என்றால் வாழ்க்கையிலும் டிரஸ்டி. நல்லது. ஆஸ்பத்திரியானது ஆத்மாக்களுக்கும் சேவை செய்து கொண்டிருக்கிறது மற்றும் சரீரத்துக்கும் சேவை செய்து கொண்டிருக்கிறது. ஆக, இரட்டை சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே யார் நிமித்த மாகியிருக்கும் ஆத்மாக்கள் இருக்கிறார்களோ,

அவர்களுக்கும் கூட இரட்டை ஆசிர்வாதங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. மிக நல்ல பிளான்கள் உருவாக்கியிருக்கிறீர்கள் இல்லையா? சேவைக்கான வாய்ப்பை (சான்ஸ்) எடுத்துக் கொள்வது என்பது சான்ஸலர் ஆவதாகும். அந்த சான்ஸலர் இல்லை, ஆன்மிக பல்கலைக்கழகத்தின் சான்ஸலர். நல்லது.

(ஆஸ்ட்ரேலியாக்காரர்கள் ஒலிம்பிக் விளையாட்டு சமயத்தில் பெரிய புரோகிராம் நடத்துவதற் கான பிளான் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவுக்கு ப்ளானைக் காட்டினார்கள்.) எங்கே ஊக்கம்-உற்சாகம் உள்ளதோ, மற்றும் அனைவர்க்கும் ஒரே வழிமுறை உள்ளதோ, அங்கே வெற்றி நிச்சயமாக இருக்கிறது. நன்றாகச் செய்யுங்கள். வெளி நாட்டில் பெயரைப் புகழ் பெறச் செய்யுங்கள். மிக நன்று.

பாரதத்திலிருந்து யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ, பாரதவாசிகளுக்கு விசேஷ நஷா உள்ளது - பாப்தாதா அவதரிப்பதும் பாரதத்தில். அதோடு சந்திக்க வருகிறார் என்றால் அதுவும் பாரதத்தில் தான் வருகிறார். ஆக, டபுள் நஷா உள்ளது இல்லையா? பாரதம் தான் வெளிநாடுகளில் செய்தி கொடுத்தது என்றால் பாரதம் வெளிநாடுகளிலும் தங்கள் பரிவாரத்தைத் தேடி ஒரே பரிவாரமாக ஆக்கி விட்டது. எனவே பாரதவாசி குழந்தை களுக்கு சதா மகத்துவம் உள்ளது. மேலும் பாரதத்தின் மகிமையை அதிகரிக்க வேண்டுமானால், பாரதவாசிகளுக்கு மகத்துவமோ இருக்கவே செய்கிறது. எனவே புதிய, பழைய குழந்தைகள் யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ, அவர்கள் மிகுந்த அன்போடு வந்து சேர்ந்திருக்கிறார்கள். பாப்தாதா குழந்தைகள் அனைவரின் அன்பு, மற்றும் நாலா பக்கமும் சேவைக்கான சகயோகத்தைப் பார்த்துக் குஷி அடைகிறார் மற்றும் குழந்தைகளும் சதா குஷியடைகின்றனர். குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? ஒரு போதும் குஷியைக் குறைத்து விடக் கூடாது. இது விசேஷமாக பாபாவின் கஜானாவாக உள்ளது, எனவே குஷியை ஒரு போதும் விட்டுவிடக் கூடாது. சதா குஷியாக இருக்க வேண்டும். நல்லது. நாலாபுறத்திலும் உள்ள சர்வ சிரேஷ்ட பாக்கியவான், சர்வ சிரேஷ்ட கஜானாக்களின் மாலிக், சதா சேவை மற்றும் ஸ்திதியின் சமநிலை வைக்கக் கூடிய ஞானம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, சர்வ சக்தி சம்பன்ன ஆத்மாக்களுக்கு சதா பந்தன்முக்த், ஜீவன்முக்த் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

வரதானம் : பரமாத்ம காரியத்தில் சகயோகி ஆகி அனைவரின் சகயோகத்தைப் பெறக்கூடிய வெற்றி சொரூபம் ஆகுக.

எங்கே அனைவரின் ஊக்கம்-உற்சாகம் உள்ளதோ, அங்கே வெற்றி சுயம் சமீபத்தில் வந்து கழுத்து மாலை ஆகி விடுகிறது. எந்த ஒரு விசால காரியத்திலும் ஒவ்வொருவரின் சகயோகத்தின் விரல் தேவை. சேவைக்கான வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளது. யாருமே சாக்குப்போக்கு சொல்ல முடியாது -- என்னால் செய்ய முடியாது, எனக்கு நேரமில்லை அமரும் போதும் எழுந்திருக்கும் போதும் ஒவ்வொரு 10-10 நிமிடம் கூட சேவை செய்யுங்கள். உடல்நலம் சரியில்லை என்றால் வீட்டில் அமர்ந்தவாறே செய்யுங்கள். மனதால், சுகத்தின் விருத்தி, சுகமய ஸ்திதி மூலம் சுகமய உலகத்தை உருவாக்குங்கள். பரமாத்ம காரியத்தில் சகயோகி

ஆவீர்களானால் அனைவரின் சகயோகம் கிடைத்து விடும்.

சுலோகன்: இயற்கையின் தலைவருடைய இருக்கையில் செட்டாகி அமர்ந்து இருப்பீர்களானால் பரிஸ்திதிகளில் அப்ஸெட் ஆக மாட்டீர்கள்.